
# புனித திருப்பலி



திருமதி. காட்டலினா - சாட்சியம்

# புனித திருப்பலி
## திருமதி காட்டலினா – சாட்சியம்
### (ஸ்பெய்ன் மொழியில் வழங்கப்பட்ட மூல முன்னுரையின் மொழி பெயர்ப்பு)

கோச்சபாம்பா மறை மாநிலம்
காஸ்லியா – 129
கோச்சபாம்பா – பொலிவியா
தொ.பே. 042 56562/3, ஃபேக்ஸ் : 042 50522

முன்னுரை :

நாங்கள் காட்டலினாவின் நூல்களைப் படித்து ஆய்வு செய்தோம். அவை இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை ஆதாரமாகக் கொண்டு, நம்மை உண்மையான ஆன்மீகப் பயணத்தில் வழிநடத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்று நம்புகிறோம். மேலும் இவரது நூல்கள், இயேசு கிறிஸ்துவை அன்பு செய்வதில் பின்பற்றுவதில் நமக்கு எடுத்துக்காட்டாக இருந்து, நாம் அன்பு செய்வதிலும், நம்பிக்கை வைப்பதிலும், நம் அன்னை புனித கன்னித்தாய் அடைந்துள்ள முதன்மை இடத்தையும் எடுத்துரைக்கிறது.

புனித கத்தோலிக்க திருச்சபையை அன்பு செய்தலிலும், பக்தி முயற்சிகளைப் புதுப்பித்தலிலும் ஒரு உண்மையான, அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்துவன் பின் பற்ற வேண்டிய செயல்முறைகள் பற்றியும் இந்த நூல்கள் எடுத்துரைக்கின்றன.

இவை அனைத்திற்காகவும், நான் இவற்றைப்பதிப்பித்து வழங்க அனுமதிக்கிறேன். அவர் முழு அன்பும், இரக்கமும் உள்ள உயிருள்ள இறைவன் என்று எண்பித்து பல ஆன்மாக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நம் ஆண்டவரது, அழைப்புக்குப் பதில் அளிக்கும் நோக்கத்துடன் ஆன்மீக வழிநடத்தி தியானம் செய்யவும் இந்த நூல்களைப் பயன்படுத்த பரிந்துரை செய்கிறேன்.

மேதகு **ரெனே ஃபெர்னாண்டஸ்**
கோச்சபாம்பா – பேராயர்
02 ஏப்ரல் 1998

# புனித திருப்பலி குறித்த – காட்டலினா சாட்சியங்கள்

நமது ஆண்டவரும், கன்னித்தாயும் எங்களுக்கு தூய செபமாலையை எவ்வாறு செபிப்பது என்பது குறித்தும், அதனை முழு மனதுடன் தியானித்து செபித்து, அந்நேரத்தில் எவ்வாறு கடவுளையும், புனித தாயாரையும் எதிர்கொண்டு மகிழ்வது என்பது குறித்தும் அற்புதமான முறையில் ஞான விளக்கம் அளித்தார்கள். அவர்கள் எங்களுக்கு எவ்வாறு நல்ல முறையில் ஒப்புரவு அருட்சாதனம் பெறுவது என்பது குறித்தும் அறிவுறுத்தினர். புனித திருப்பலியின் போது என்ன நடைபெறுகிறது. அதனை எவ்வாறு நாம் முழு மனதுடன் வாழ்வாக்குவது என்பது பற்றிய அறிவுரைகளையும் அளித்தார்கள்.

நான், நம் ஆண்டவரது திருப் பெயரின் மேலான மகிமைக்காகவும், நம் ஆண்டவரிடம் யாரெல்லாம் முழு மனதையும் திறந்துள்ளார்களோ அவர்களது மீட்புக்காகவும், முழு உலகிற்கும் சாட்சியம் கூற விரும்புகிறேன். கடவுளுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட பலர் தங்களது அர்ப்பண வாழ்வை கிறிஸ்துவின் அன்புத்தீயில் தூண்டுதல் செய்துகொள்ளவும் சாட்சியம் கூறுகிறேன். இவர்களுள் சிலர், ஆண்டவரை நமக்கு உணவாக உலகிற்குக் கொண்டுவரும் சக்தியுடைய கரங்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

'சடங்கு முறையில்' மட்டும் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும் பலர் தங்களது வழக்கத்தை மாற்றிக்கொண்டு, தினமும் ஆண்டவரை உள்ளன்போடு எதிர்கொள்ளும் மகிழ்வு பெற நான் சாட்சியம் கூறுகிறேன். மேலும் உலகெங்கிலும் உள்ள எனது பொதுநிலை சகோதர – சகோதரிகள் திருப்பலி / திருவுணவு கொண்டாட்டத்தை தங்கள் உள்ளங்களில் மிகப்பெரிய அற்புதமாக உணர்ந்துகொள்ள சாட்சியம் கூறுகிறேன்.

மங்கள வார்த்தை முதல்நாள் திரு விழிப்பு ஆராதனையின் போது, எங்கள் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒப்புரவு அருட்சாதனம் (பாவசங்கீர்த்தனம்) பெறப் போயிருந்தனர். செபக் குழுவைச் சார்ந்த சில பெண்கள் ஒப்புரவு பெற முடியாமையினால் மறுநாள் திருப்பலிக்கு முன்பு செய்ய விரும்பினர்.

மறுநாள் சற்று, தாமதமாக நான் ஆலயம் வந்தடைந்த போது மேதகு பேராயரும் குருக்களும் ஏற்கனவே தூயகத்தின் பின் அறையில் இருந்து வந்துகொண்டிருந்தார்கள். கன்னி மரியாள், ஒருவனது ஆன்மாவிற்கு சுவையூட்டும் தனது பெண்மையான மென்குரலில் பின் வருமாறு கூறினார்கள்.

*"இன்று நீ கற்றுக்கொள்ள வேண்டிய நாள். நீ காண்பது அனைத்திலும் கூரிய கவனம் செலுத்திட வேண்டுமென நான் விரும்புகிறேன். நீ இன்று அனுபவிப்பது எல்லாவற்றையும் மனித குலத்துடன் பகிர்ந்து கொள்"*. ஏதும் புரியாமலேயே நான் அவரால் ஈர்க்கப்பட்டேன். மிகவும் கவனமுடன் இருக்க முயற்சித்தேன்.

நான் கவனித்த முதல் நிகழ்வு இதுதான். மிக அழகான குரலுடைய பாடகர் குழு ஒன்று வெகு தூரத்திலிருந்து பாடிக்கொண்டிருப்பதைப் போலத் தோன்றியது. சில நேரங்களில் அந்த இசை மிக அருகில் வந்தும், பின் காற்றின் ஓசை போல வெகு தூரத்திலும் ஒலித்தது.

பேராயர் அவர்கள் திருப்பலியைத் தொடங்க ஒப்புரவு வழிபாட்டில் நுழைந்தபோது கன்னித்தாய் இவ்வாறு கூறினார்கள்.

*"உன் மனதின் ஆழத்திலிருந்து, அவருக்கு வருத்தம் விளைவித்த உன் எல்லா தவறுகளுக்காகவும் ஆண்டவரிடம் மன்னிப்புக்கேள். இதன் மூலம் தகுதியான முறையில் உன்னால் இந்த திருப்பலியில் பங்கு பெற முடியும்"*.

நான் ஒரு நொடி யோசித்தேன். நேற்று இரவு நான் ஒப்புரவு அருட்சாதனம் பெற்றேன். உண்மையாக நான் இறைவனின் திரு இரக்கத்தில் இருக்கிறேன்.

*"நேற்று இரவு முதல் நீ ஆண்டவரை துன்புறுத்தவில்லை என்ற நினைக்கின்றாயா? நான் சிலவற்றை உனக்கு ஞாபகப்படுத்தட்டுமா? நீ இங்கு வர புறப்பட்டபோது, உனக்கு எப்போதும் உதவி செய்யும் சிறுமி உன்னிடம் ஏதோ கேட்டாள். நீ அவசரத்தில் இருந்ததால் நீ அவளுக்கு அன்பாக பதில் கூறவில்லை. உன்னிடம் இரக்கம் குறைவுபட்டது. ஆனால் நீ நான் கடவுளை துன்புறுத்தவில்லை என்று கூறுகிறாய்"*.

*"நீ இங்கு வரும் வழியில் ஒரு பேருந்து உன்னை இடித்து விடுவது போல் உன் பாதையில் வந்தது. நீ திருப்பலிக்கான தயாரிப்பு செபத்தைச் சொல்லவில்லை. மாறாக பரிதாபத்திற்குரிய மனிதனைப் பார்த்து விரும்பத்தகாத வகையில் பேசினாய். அப்போது நீ இரக்கத்தில் தவறி, பொறுமையையும் அமைதியையும் இழந்து போனாய். ஆனால் நான் ஆண்டவரைக் காயப்படுத்தவில்லை என்று கூறுகிறாய்...?"*

*"திருப்பலி நிறைவேற்றும் குருக்களின் ஊர்வலம் ஏற்கனவே தொடங்கிவிட்ட பிறகு நீ கடைசி நிமிடத்தில் வந்து சேர்ந்தாய்... நீ தகுந்த முன் தயாரிப்பின்றி திருப்பலியில் பங்கு பெறப்போகிறாய்...."*

ஆகட்டும் அம்மா, மேலும் எதுவும் கூற வேண்டாம். நீங்கள் மேலும் எதைப் பற்றியேனும் ஞாபகப்படுத்தினால் நான் துன்பத்தாலும் அவமானத்தாலும் இறந்து போய்விடுவேன் என்றேன்.

***"நீங்கள் ஏன் திருப்பலிக்கு கடைசி நேரத்தில் வந்து சேரவேண்டும் ? நீங்கள் சற்றுநேரம் முன்னேவந்து, இந்தப் புனிதமான நேரத்தில் வாழ்வதற்கான வரங்களையும், உங்கள் கவனச் சிதறல்களையும், கவலைகள் பிரச்சனைகள் ஆகியவற்றிலிருந்து உங்களை விடுவித்து அமைதியை அருளும் அவரது தூய ஆவியை அனுப்பும்படி ஆண்டவரிடம் மன்றாடவேண்டும். ஆனால் நீங்களோ எவ்வித ஆன்மீகத் தயாரிப்பின்றியும், ஏதோ ஒரு சாதாரண நிகழ்வில் பங்கெடுக்கப் போவதைப்போல் திருப்பலி கொண்டாட்டம் ஆரம்பிக்கும் போது வருகின்றீர்கள். ஏன்? இது அற்புதங்களின் அற்புதம், வல்லவராம் கடவுள், உங்களுக்கு தமது மிகப்பெரிய பரிசைத்தரும் நேரத்தில் வாழப்போகின்றீர்கள். ஆனால் அந்தப் பரிசை எவ்வாறு அனுபவிப்பது என்பது உங்களுக்குத் தெரியவில்லை"***

இது எனக்குப்போதும். நான் என் நிலை மிகவும் பரிதாபமாக இருப்பதை உணர்ந்தேன். நான் அதிக அளவில் இறைவனிடம் மன்னிப்புப்பெற விரும்பினேன். இன்றைய நாளின் குற்றங்களுக்கு மட்டுமின்றி நானும் மிகப்பலரைப் போல, பல நேரங்களில் குருவானவர் மறையுரை முடித்த பிறகு ஆலயத்தில் நுழைய காத்திருந்திருக்கிறேன். பல நேரங்களில் திருப்பலியின் போது ஆலயத்தில் இருப்பதன் தன்மை புரியாமல் அல்லது புரிந்துகொள்ள மறுத்த நிலையிலும் இருந்திருக்கிறேன். பெரும்பாலான அந்த நேரங்களில் என் ஆன்மாவில் பெரும்பாவம் இருந்ததாலும் நான் திருப்பலியில் பங்கேற்கத் தயங்கினேன்.

அது ஒரு *விழா நாள்* – *அன்று உன்னதங்களிலே கீதம் பாடப்பட வேண்டும்.* ***"நீ அவரது படைப்பு என்பதை உணர்ந்து ஏற்றுக்கொண்டு உன்னதரான மூவொரு கடவுளை உன் முழு அன்பினால் வாழ்த்தி மகிமைப்படுத்து"*** என்று நம் அன்னை கூறினார்கள்.

அந்த உன்னதங்களிலே என்னும் கீதம் எவ்வளவு வித்தியாசமாக இருந்தது தெரியுமா ? திடீரென்று நான், மிகவும் தூரத்திலுள்ள, மிகவும் ஒளி சூழ்ந்த, கம்பீரமான கடவுளின் அரியணை முன்பு நிற்பதைக் கண்டேன். மிகவும் ஆழமான அன்புடன் அவருக்கு தொடர்ந்து நன்றி சொல்லிக் கொண்டிருந்தேன்.

***“விண்ணுலக அரசரே / எல்லாம் வல்ல தந்தை இறைவா / உமது அளவிடமுடியாத மகிமைக்காக உம்மைப் போற்றுகிறோம் / நாங்கள் உம்மை வாழ்த்துகிறோம் / உம்மை ஆராதிக்கிறோம் / உம்மை மகிமைப்படுத்துகிறோம் / உமக்கு நன்றி கூறுகிறோம்”***

தந்தை கடவுளின் கருணை நிறைந்த முகத்தை நினைவில் கொண்டுவந்தேன்.

***“ஆண்டவராகிய இயேசுவே / தந்தையின் ஒரே மகனே / கடவுளின் செம்மறியான இறைவா / உலகின் பாவங்கள் அனைத்தையும் எடுத்துவிடும்” அப்போது இயேசு எனக்கு முன்பாக மிகுந்த இரக்கமும் கருணையும் கொண்ட முகத்துடன் தோன்றினார். அழகான அன்புள்ள கடவுள் “அவர் ஒருவரே ஆண்டவர் / அவர் ஒருவரே உன்னதர்” அவர் அந்த நேரத்தில் என்னை முழுவதும் அசைத்தார். நடுங்க வைத்தார்.***

நான் ஆண்டவரிடம் சொன்னேன் – ஆண்டவரே எல்லா தீய ஆவிகளில் இருந்தும் என்னை விடுவித்தருளும். நான் உமக்கே சொந்தம். என் ஆண்டவரே, புனித நற்கருணையிலிருந்துவரும் அற்புத பலன்களை நான் பெற்றுக்கொள்ளவும், என் வாழ்வில் நற்பலன்களை நான் தரவும், உமது சமாதானத்தை எனக்குத்தாரும். இறைவனின் தூய ஆவியே! என்னை மாற்றும். என்னுள் செயலாற்றும் என்னை வழி நடத்தும். ஓ இறைவா, உமக்குத்தகுந்த முறையில் பணி செய்ய எனக்கு வரம் தாரும்.

வார்த்தை வழிபாட்டிற்கான நேரம் வந்தபோது. கன்னிமரியாள் பின் வருவனவற்றை திரும்பச் சொல்லும்படி கூறினார்கள். ***“இறைவா இன்று உமது வார்த்தைகளைக் கேட்டு நிறைந்த நற்பலன் தரவிரும்புகிறேன். உமது தூய ஆவி என் இதயத்தின் உட்புறத்தைத் தூய்மையாக்கட்டும். உமது வார்த்தை என்னுள் வளர்ந்து, பெருகி, உமக்குகந்த இடமாக என் இதயத்தை தூய்மையாக்கட்டும்”.***

அன்னை மரியாள் கூறினார்கள் ***“நீ எல்லா வாசகங்களுக்கும், குருவானவரின் எல்லா மறையுரைகளுக்கும், கவனமுடன் செவிமடுக்க வேண்டும். கடவுளின் வார்த்தை பலன்தராமல் திரும்பிவராது என்னும் விவிலிய கூற்றை நினைத்துக்கொள். நீ கவனமுடன் இருந்தால், நீ செவிமடுத்தவை உன்னுள் தங்கும். உன்னுள் உணர்வுளை எழுப்பிய வார்த்தைகளை நாள் முழுவதும் தியானிக்க வேண்டும். சில நேரங்களில் அது ஒரு சொல்லாகவோ, வாக்கியங்களாகவோ அல்லது முழு நற்செய்தி வாசகமாகவோ***

*இருக்கலாம். அதை நாள் முழுவதும் தியானம் செய். அது அப்போது உன்னுடையதாக மாறும். ஏனெனில் கடவுளின் வார்த்தை உன்னை மாற்ற நீ அனுமதிக்கும் போது, அது உன் வாழ்வை மாற்றும்."*

*"நீ இன்று ஆண்டவரது வார்த்தைகளைக் கேட்க வந்திருப்பதாகவும், அவர் உனது இதயத்தில் பேசுவதை நீ கேட்க விரும்புவதாகவும் ஆண்டவரிடம் சொல்"*

கடவுளின் வார்த்தையைக் கேட்க அவர் கொடுத்த வாய்ப்புக்காக நான் கடவுளுக்கு மீண்டும் நன்றி கூறுகிறேன். இத்தனை ஆண்டுகள் நான் கடின மனதுடன் வாழ்ந்தமைக்காவும், வெறுமையாகவும் திருச்சபையின் சட்டம் என்ற ஒரே காரணத்துக்காகவே எனது குழந்தைகளைத் திருப்பலிக்கு செல்ல கற்றுக் கொடுத்தமைக்கும் நான் அவரிடம் மன்னிப்புக்கேட்டேன்.

நான் பல நேரங்களில் கடமைக்காகவே திருப்பலியில் பங்கு பெற்றுள்ளேன். அதன் மூலம் நான் மீட்பு அடைந்ததாகவும் நம்பினேன். ஆனால் திருப்பலியை நான் வாழ்வாக்கிக் கொள்ளவில்லை. வாசகங்களுக்கோ அல்லது குருவின் மறையுரைகளுக்கோ கவனம் செலுத்தவில்லை.

எனது அறியாமையால் பல ஆண்டுகள் தேவையின்றி எனக்கேற்பட்ட இழப்பு குறித்து எவ்வளவு வருந்தினேன் தெரியுமா? திருமணத் திருப்பலிக்காகவோ, இறந்தவர் திருப்பலி என்பதற்காகவோ, நம் சமூகம் நம்மைப் பார்க்கிறது என்பதற்காகவோ நாம் திருப்பலியில் பங்கேற்பது எவ்வளவு மேலோட்டமானது என்பது தெரியுமா? நமது திருச்சபை பற்றியும், அருட்சாதனங்கள் பற்றியும் நாம் எவ்வளவு அறியாமையில் இருக்கிறோம் தெரியுமா? நமது வாழ்வை ஒரு நிமிடம் கூட அதிகரிக்க முடியாத நமக்கு ஒரு பயனும் தராத, ஒரு நொடியில் மறைந்து போகக் கூடிய உலகம் சார்ந்த கருத்துக்களை, நிலைகளை அறிந்து கொள்ளவும், அறிவை வளர்த்துக் கொள்ளவும் நாம் எவ்வளவு நேரத்தை வீணாக்குகிறோம் தெரியுமா? ஆனால் நாம் வாழும் போது மண்ணகத்தில் விண்ணகச் சுவையையும், அதன் பிறகு நிலை வாழ்வையும் தரக்கூடியது பற்றி நாம் ஒன்றுமே அறிந்து கொள்வதில்லை. மேலும் நாம் நம்மை நாகரீகமான மனிதர்கள் என்று அழைத்துக்கொள்கிறோம்.

திருப்பலியின் காணிக்கை நேரம் வந்தபோது புனித கன்னி மரியாள் இவ்வாறு கூறினார்கள். ***"இதைப் போன்று செபம் சொல்"*** நான் அவள் சொன்னதை மீண்டும் சொன்னேன் ***"இறைவா ! என்னை முழுமையும்***

*எனக்குள்ள யாவற்றையும் என்னால் இயலக்கூடிய யாவற்றையும் உமக்கு காணிக்கையாக்குகிறேன். அனைத்தையும் உமது கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன். சிறுமையில் இருக்கின்ற என்னை முழுமையாக்கும், எல்லாம் வல்ல இறைவா ! உமது திருமகனின் நற்குணங்கள் வழியாக என்னை உருமாற்றும்"*

*"இறைவா என் குடும்பத்திற்காகவும், எனக்கு உதவுபவர்களுக்காகவும், எமது அப்போஸ்தல பணி (சபையை) சார்ந்த ஒவ்வொரு உறுப்பினருக்காகவும், எங்களை எதிர்த்து போரிடுபவர்களுக்காகவும், எனது எளிய செபத்தை உதவியாக கேட்பவர்களுக்காகவும் மன்றாடுகிறேன். இறைவா ! அவர்கள் நடந்து செல்லும் பாதையில் எனது இதயத்தைப் பரப்பி வைத்து அவர்களது நடையின் கடுமையை குறைக்க எனக்குக் கற்றக்கொடும். இவ்வாறுதான் எல்லா புனிதர்களும் இறைவனிடம் மன்றாடினார்கள். இவ்வாறுதான் நீங்கள் அனைவரும் இறைவனிடம் மன்றாட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்"*

இவ்வாறு செபிக்கத்தான் இயேசு நம்மைக் கேட்கிறார். நமது இதயங்களை அவர்கள் நடந்து செல்லும் பாதையில் பரப்பி வைத்து, அவர்களின் நடையின் வேதனையை குறைக்க வேண்டும். பலகூர் என்ற இடத்தைச் சார்ந்த நான் மிகவும் அன்பு செய்த புனிதையான மரிய ஜோஸ் எஸ்கிரிவா என்பவரின் செபங்கள் அடங்கிய ஒரு புத்தகத்தை பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் படித்தேன். அந்தப் புத்தகத்தில் கன்னி மரியாள் எனக்குக் கற்றுக்கொடுத்த செபத்தை ஒத்த ஒரு செபம் கண்டேன். நான் என்னை ஒப்புக் கொடுத்த இந்தப் புனிதை இத்தகு செபத்தால் கன்னி மரியாளுக்கு மகிழ்ச்சி கொடுத்தாள் போலும்.

திடீரென்று நான் இதற்கு முன்பு பார்த்த சிலர் எழுந்து நின்றார்கள். பேராலயத்துள் இருந்த ஒவ்வொருவர் அருகே இருந்தும் இன்னொருவர் எழுந்து நின்றார். விரைவில் பேராலயம் முழுவதும் அழகான இளைஞர்களால் நிரம்பியது. அவர்கள் மிக வெண்மையான ஆடை அணிந்திருந்தார்கள். அவர்கள் பேராலய நடைபாதையில் நகர்ந்து பலிபீடம் நோக்கிச் சென்றார்கள்.

தேவ அன்னை கூறினார்கள். *"உற்றுப்பார், இவர்கள் ஒவ்வொருவரும் இங்கே பேராலயத்தில் இருக்கும் ஒவ்வொருவரின் காவல் தூதர்கள். இந்த நேரத்தில்தான் உங்களது காவல் தூதர்கள் உங்களது காணிக்கைகளையும், மன்றாட்டுகளையும் ஆண்டவரின் திருப்பீடம் முன்பு கொண்டு செல்கின்றனர்"*

இந்த நேரத்தில் நான் மிகுந்த வியப்பில் மூழ்கிப்போனேன். ஏனெனில் இவர்கள் கற்பனை செய்ய முடியாத அளவு ஒளி வீசும் மிக அழகான முகங்களைக் கொண்டிருந்தனர். ஏறக்குறைய பெண்மை பண்பு கொண்ட அழகான முகபாவம் கொண்டிருந்தனர். ஆனாலும் அவர்களது உடலமைப்பு, கரங்கள், அவர்களது உயரம் போன்றவை ஆண் தன்மை கொண்டிருந்தனர். அவர்களின் ஊர்வலம் மிகவும் அழகாகக் காணப்பட்டது.

அவர்களில் சிலர் தங்கள் கரங்களில் பொன் கோப்பைகளில் ஏதோ எடுத்துச் சென்றனர். அவை வெண் பொன்னிற ஒளியில் மிளிர்ந்தன. கன்னி மரியாள் இவ்வாறு கூறினார்கள்.

***"திருப்பலி கொண்டாட்டம் என்றால் என்ன என்பதை உணர்ந்து தங்கள் திருப்பலிக்கு பல கருத்துக்களை எடுத்து வந்துள்ளவர்களின் காவல் தூதர்கள் இவர்கள். இவர்கள் ஆண்டவருக்கு காணிக்கை தர ஏதேனும் எடுத்து வந்துள்ளார்கள்."***

***"இந்த நேரத்தில் உன்னையே நீ காணிக்கையாக்கு. உனது துன்பங்கள், வலிகள், எதிர்ப்புகள், மகிழ்வுகள், சோகங்கள், மன்றாட்டுகள் அனைத்தையும் காணிக்கையாக்கு. திருப்பலி என்பது அளவிட முடியாத மதிப்புள்ளது என்பதைப் புரிந்து கொள். எனவே அவரிடம் கேட்பதிலும் கொடுப்பதிலும் தாராளமாயிரு"***

முதலில் சென்ற காவல் தூதர்களைப் பின் தொடர்ந்து சென்ற தூதர்கள் எதையும் பலி பீடத்திற்கு எடுத்துச் செல்லவில்லை. வெறும் கையுடன் சென்றார்கள். கன்னிமரியாள் பின்வருமாறு கூறினார்கள். ***"இங்கு வந்திருக்கும் மக்களில் யாரெல்லாம் எதையும் காணிக்கையாக கொண்டுவரவில்லையோ அவர்களின் காவல் தூதர்கள் இவர்கள். திருப்பலி கொண்டாட்டத்தின் ஒவ்வொரு நேரத்தையும் வாழ்வதில் ஆர்வமில்லாதவர்கள் இவர்கள். ஆண்டவரின் திருப்பீடத்திற்கு கொண்டு செல்ல இவர்களிடம் எந்த நற்கொடையும் இல்லை"***

பவனியின் முடிவில், சோகத்துடன், தரை நோக்கிப் பார்த்துக் கொண்டும் தங்களது சொந்த மன்றாட்டுகளை கரத்தில் ஏந்தியும் வேறுசில காவல் தூதர்கள் வந்து கொண்டிருந்தார்கள். ***"இங்கு வந்திருக்கும் மக்களில் யாரெல்லாம் விருப்பமில்லாமல் வந்திருக்கின்றனரோ, யாரெல்லாம் வற்புறுத்தலில் வந்திருக்கின்றனரோ, யாரெல்லாம் திருப்பலியில் பங்கெடுப்பதில் எவ்வித விருப்பமுமின்றி வெறும் கடமைக்காக இங்கே வந்திருக்கின்றனரோ அவர்களின் காவல்***

*தூதர்கள் இவர்கள். தங்களது சொந்த மன்றாட்டுகள் தவிர வேறெதுவும் திருப்பலி பீடத்திற்கு ஏந்திச்செல்ல முடியாததால் இக்காவல் தூதர்கள் சோகமாக செல்கின்றனர்."*

*"உன்னுடைய காவல் தூதர்க்கு சோகம் வருவிக்காதே, நிறைய கேள், பாவிகள் மனம் திரும்ப, உலக சமாதானத்திற்காக, உங்கள் குடும்பங்களுக்காக உங்கள் அருகில் இருப்பவர்களுக்காக உங்களிடம் செப உதவி கேட்டவர்களுக்காக கேள். நிறைய கேள். உனக்காக மட்டுமல்லாமல், மற்ற ஒவ்வொருவருக்காகவும் கேள்"*

*நீ உன்னையே வெறுமையாக்கி உன்னையே அளிக்கும் காணிக்கைதான் ஆண்டவருக்கு மிகவும் பிரியமானது என்பதை நினைவில் கொள். அப்போதுதான் திருப்பலியில் இயேசு இறங்கி வருகையில் தனது நிறைவினால் உன்னையும் மாற்றுவார். உன்னிடமிருந்து தந்தைக்கு உன்னால் என்ன கொடுக்க முடியும் ? வெறுமையையும், பாவத்தையும் மட்டும் தான். ஆனால் ஒருவன் தன்னை இயேசுவின் நிறைவுகளோடு ஒன்றிணைத்து காணிக்கையாக அளிக்கும் போது, அந்த காணிக்கை தந்தைக்கு மகிழ்ச்சியளிக்கிறது.*

அந்த பவனி மிகவும் அழகாக இருந்தது. அதனை எதனுடனும் ஒப்பிட முடியாது. வானத்தின் எல்லா படைப்புகளும் திருப்பீடத்தின் முன் தலை குனிந்து கொண்டிருந்தன. சில, தங்கள் காணிக்கைகளை தரையில் வைத்தன. வேறுசில முழந்தாள் படியிட்டு தங்கள் நெற்றி தரையில் படும்படி குனிந்து வணங்கின.

திருப்பலியின் தொடக்க உரையின் நிறைவுப் பகுதி வந்தபோது, திருக்கூட்டம் "தூயவர், தூயவர், தூயவர்" என்று சொன்னபோது திருப்பணியாளர் பின்புறம் இருந்த அனைவரும் மறைந்து போயினர். பேராயரின் இடது பின்புறத்தில் குறுக்காக ஆயிரக்கணக்கான (சம்மனசுகள்) வானதூதர்கள் தோன்றினர். பெரிய, சிறிய வானதூதர்கள் பெரிய, சிறிய இறைக்கைகளுடைய, இறைக்கைகள் இல்லாத, வானதூதர்களாக இருந்தார்கள். முன்னே தோன்றியவர்கள் போலவே இவர்களும் குருக்கள், பீடச்சிறுவர்கள் போன்று மிக வெண்மையான உடைகளை அணிந்திருந்தார்கள்.

இவர்கள் எல்லாரும் பக்தியுடன் கரம் குவித்து முழந்தாள் படியிட்டனர். பக்தியுடன் தலை குனிந்து வணங்கினர். நிறைய பாடற் குழுக்கள் இருப்பது போன்று வேறுபட்ட, குரல்களில் அழகிய மக்களுடன் ஒன்றிணைந்து தூயவர் – தூயவர் – தூயவர் என்று பாடினார்கள்.

எழுந்தேற்ற நேரமான மிகவும் அற்புதங்களின் அற்புதமான நேரம் வந்தது. பேராயரின் வலது பின்புறமிருந்து ஏராளமான மக்கள் குறுக்கு வாக்கில் எழுந்து நின்றார்கள். அவர்கள் ரோசாப்பூ நிறம், பச்சை, மென் நீலம், ஊதா, மஞ்சள் என்ற பல மென்மையான நிறங்களில் ஆடை அணிந்திருந்தார்கள். அவர்கள் முகம் மகிழ்வுடன் ஒளி வீசிக் கொண்டிருந்தது. அவர்கள் ஒரே வயதினராக காணப்பட்டார்கள். நீங்களே பாருங்கள் (நான், ஏனென்று சொல்லவில்லை) அவர்கள் பல வேறுபட்ட காலங்களைச் சேர்ந்த மக்கள், ஆனாலும் அவர்களது முகங்கள் சுருக்கங்களின்றி மகிழ்வுடன் ஒரே மாதிரியாகக் காணப்பட்டன. "தூயவர் தூயவர் தூயவர்" என்ற பாடல் பாடப்பட்ட போது அவர்கள் அனைவரும் தாள் பணிந்தார்கள்.

நமது அன்னை பின்வருமாறு கூறினார்கள். ***"இவர்கள் அனைவரும் புனிதர்கள், விண்ணக ஆசிர் பெற்றவர்கள். இவர்களிடையே ஏற்கனவே இறைவனது பிரசன்னத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் உங்கள் உறவினர்களின் ஆன்மாக்களும் உள்ளன.*** நான் அப்போது தான் அவரைப் (கன்னி மரியாளைப்) பார்த்தேன். திருப்பலி நிறைவேற்றும் பேராயரின் நேராக வலது பின்பறத்தில் சற்றுத்தள்ளி இருந்தார்கள். தரையிலிருந்து சற்று உயரத்தில் இருந்தார்கள். படிகநிலை தண்ணீர் போன்ற (நிறத்தில்) ஒளி ஊடுருவக் கூடிய மெல்லிய அதே நேரத்தில் ஒளி வீசுசின்ற துகிலின் மேல் முழந்தாளிட்டிருந்தார்கள். புனித கன்னிகை, இருகரம் குவித்த நிலையில், திருப்பணியாளரை மதிப்புடனும் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அங்கிருந்து என்னைப் பார்க்காமல் ஆனால் நேரடியாக என் மனதுக்குள் மௌனமாகப் பேசினார்கள்.

***"நான் மேதகு பேராயர் பின்னால் நின்று கொண்டிருப்பதைப் பார்ப்பது உனக்கு வியப்பாக இருக்கின்றதா? இது இப்படித்தான் இருக்க வேண்டும். எனது மகன் எனக்கு நிறைய அன்பு கொடுத்திருப்பினும், அவர்களது குருத்துவக் கரங்களால் தினமும் அற்புதம் நிறைவேற்றும் மகிமையுடைய கரங்களை குருக்களுக்கு கொடுத்ததைப் போன்று எனக்கு கொடுக்கவில்லை. இதனால் கடவுள் குருக்கள் வழியாக நிறைவேற்றும் அற்புதத்தை நினைத்து குருக்களிடம் ஆழ்ந்த மதிப்பு கொள்கிறேன். அதுவே அவர்கள் பின்னால் என்னை மண்டியிடத் தூண்டுகிறது."***

ஓ என் கடவுளே ! எவ்வளவு மகிமையையும் இரக்கத்தையும் குருக்கள் மீது ஆண்டவர் பொழிந்துள்ளார். நாமும், குருக்களில் சிலரும் இதைப் புரிந்து கொள்ளவில்லை.

திருப்பீடத்தின் முன்பு சாம்பல் நிறத்தில், கரங்களை உயர்த்திய நிலையில் நிழல் உருவங்களாக சிலர் தோன்றினார்கள். புனிதக் கன்னி மரியாள் இப்படி கூறினார்கள். *"உத்தரிக்கும் நிலையில் உள்ள பாக்கியம் பெற்ற ஆன்மாக்கள் இவர்கள். அவர்கள் மோட்ச வாழ்வை பெற உங்களது மன்றாட்டுக்களுக்காக் காத்திருக்கின்றனர். அவர்களுக்காக மன்றாட மறக்காதீர்கள். தங்களுக்கென்று மன்றாட முடியாத நிலையில் இருக்கும் இவர்கள் உங்களுக்காக மன்றாடுகின்றனர். அவர்கள் இங்கிருந்து விடுதலை பெற்று கடவுளுடன் இணைந்து நிலை வாழ்வில் மகிழ்ந்திருக்க நீங்கள் தான் செபிக்க வேண்டும்".*

*இப்போது பார் ! நான் எல்லா நேரங்களிலும் இங்கே இருக்கிறேன். ஆனால் நான் காட்சி கொடுத்த இடங்களைத் தேடி மக்கள் யாத்திரை செல்கின்றனர். அங்கே அவர்கள் நிறைய கடவுள் இரக்கத்தைப் பெற்றுக் கொள்வதால் அது நல்லதுதான். ஆனால் காட்சி கொடுக்காத நேரங்களிலும் இடங்களிலும் நான் திருப்பலியில்தான் அதிகமாக பிரசன்னமாயிருக்கிறேன். நற் கருணை கொண்டாட்டம் நடைபெறும் திருப்பீடத்தின் அடியில் நான் நின்று கொண்டிருப்பதை நீ எப்போதும் பார்க்கலாம். மேலும் நற்கருணை பேழையின் அடியில் வானதூதர்களுடன் நின்று கொண்டிருக்கிறேன். ஏனெனில் நான் எப்போதும் அவருடன் இருக்கிறேன்.*

தூயவர் – தூயவர் – தூயவர் என்று பாடும் நேரத்தில் தேவ அன்னையின் அழகிய முகத்தைப் பார்ப்பதும், மற்றவர்கள் தங்கள் கரங்களைக் குவித்து ஒளிரும் முகங்களுடன் இடைவிடாமல் தொடரும் அந்த அற்புதத்துக்காக காத்திருப்பதைப் பார்ப்பதும் விண்ணகத்தில் இருப்பது போல் இருந்தது.

*இந்த நேரத்திலும் கூட மக்கள் பேசிக் கொண்டிருப்பதை நினைக்கையில் நான் வருந்துகிறேன். பெண்களை விட அதிக எண்ணிக்கையில் ஆண்கள், ஏதோ ஆண்டவருக்கு அஞ்சலி செலுத்துவதைப் போல் கரங்களை மடித்து நின்ற கொண்டிருப்பது எனக்கு மிக வருத்தமளிக்கிறது என்று உன்னிடம் சொல்கிறேன்.*

***“ஒரு ஆண் மகன் கடவுள் முன்பு தன் கால்களை மடித்து மண்டியிடும் நேரத்தில்தான். ஆண்மையில் மிளிர்கிறான் என்று எல்லாருக்கும் சொல்”*** என்று கன்னி மரியாள் கூறினார்கள்.

திருப்பணியாளர், “வசீகர” வார்த்தைகளை உச்சரித்தார். அவர் சாதாரண உயரமுடைய மனிதர், ஆனால் திடீரென்று வளர ஆரம்பித்தார். ஒளியில் நிரம்பினார். வெண்மைக்கும் தங்க நிறத்துக்கும் இடைப்பட்ட நிறத்தில் ஒரு தெய்வீக ஒளி அவரைச் சூழ்ந்தது. அவரது முகத்தைச் சுற்றிலும் அவ்வொளி வளர்த்து அதிகரித்தது. அதன் காரணமாக அவரது முக அமைப்பை என்னால் பார்க்க முடியவில்லை. அவர் நற்கருணை அப்பத்தை உயர்த்திய போது நான் அவரது கரங்களைப் பார்த்தேன். கரங்களின் பின்புறம் சில அடையாளங்கள் இருந்தன. அவற்றிலிருந்து பேரொளி புறப்பட்டது. அவர் இயேசு தான். இவர்தான் திருப்பணியாளரைச் சுற்றி தன் உடலால் போர்த்தியிருக்கிறார். அன்புடன் பேராயரின் கரங்களைச் சூழ்ந்திருக்கிறார். அத்தருணத்தில் நற்கருணை அப்பம் வளர்ந்து மிகப் பெரிதானது. அதில் தன் மக்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் இயேசுவின் அற்புத முகம் காணப்பட்டது.

உணர்வில் உந்தப்பட்டு நான் தலை வணங்க விரும்பினேன். நம் அன்னை பின்வருமாறு கூறினார்கள். ***“கீழே பார்க்க வேண்டாம். நிமிர்ந்து அவரைப் பார்த்து தியானி. உனது பார்வையை அவருடன் பகிர்ந்து கொள். பாத்திமா செபத்தை மீண்டும் மீண்டும் சொல். இறைவா நான் உம்மை நம்பாதவர்களுக்காகவும் நான் மன்னிப்பு கேட்கின்றேன். மன்னிப்பு – இரக்கம் – இப்போது நீ அவரை எவ்வளவு அதிகமாக அன்பு செய்கின்றாய் என்பதைச் சொல். அரசருக்கெல்லாம் அரசரானவருக்கு அஞ்சலி செலுத்து”.***

இதை நான் அவரிடம் சொன்னேன். மிகப்பெரிய நற்கருணை அப்பத்திலிருந்து அவர் என்னை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது. முழு அன்புடன் எல்லாரையும் அவர் இவ்வாறுதான் உற்று நோக்குகிறார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். விண்ணகத்தின் எல்லாப் புனிதர்களும் வானதூதர்களும் செய்வது போன்று நானும் எனது முன்நெற்றி தரையில் படும்படி தலை குனிந்து வணங்கினேன். ஒரு நொடி நேரம் ஆண்டவர் இயேசு எவ்வாறு ஒரே நேரத்தில் திருப்பணியாளர் உடலிலும் அப்பத்திலும் இருக்கிறார் என்று வியப்படைந்தேன். அவர் அப்பத்தை கீழே இறக்கிய போது அது தனது அளவை அடைந்தது. எனது கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. எனது வியப்பை என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை.

இப்போது பேராயர் திராட்சை இரசத்தின் மீது "வசீகர" வார்த்தைகளை உச்சரித்தார். அவர் அவ்வாறு சொன்னபோது விண்ணகத்திலிருந்து மின்னல் தோன்றியது. பேராலயத்தின் கவர்களும் மேற்கூரையும் மறைந்து போனது. திருப்பீடத்திலிருந்த பேரொளி தவிர வேறு எங்கும் இருளாகக் காணப்பட்டது.

திடீரென்று சிலுவையில் அறையுண்ட இயேசுவை தொங்கும் நிலையில் பார்த்தேன். நான் அவரைத் தலையிலிருந்து கீழ் மார்ப்புப்பகுதி வரை பார்த்தேன். சிலுவையின் குறுக்குச் சட்டத்தை வலிய பெரிய கரங்கள் தாங்கிக் கொண்டிருந்தன. இந்தப் பேரொளியிலிருந்து ஒரு சிறிய ஒளி புறா வடிவில் எழுந்து பேராலயம் முழுவதும் வேகமாகப் பறந்தது. அது பேராயரின் இடது தோளில் வந்து தங்கியது. நீண்ட முடி (கூந்தல்), ஒளிரும், காயங்கள், அகன்ற உடல் என்று இயேசுவையே நான் பேராயரில் கண்டேன். அனால் அவரது முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை.

மேலே சிலுவையிலறையப்பட்ட இயேசு, அவரது தலை, அவரது வலது தோளில் சாய்ந்திருந்தது. அவரது திரு முகத்தையும், அடிபட்ட கரங்களையும் கிழிந்த தசைகளையும் என்னால் தியானிக்க முடிந்தது. அவரது வலது மார்பில் அவருக்கு காயம் இருந்தது. அதிலிருந்து வந்த இரத்தம் அவரது இடது புறம் பொங்கி வழிந்தது. அவரது வலதுபுறம், ஒளிரும் தன்மை கொண்ட தண்ணீர் போன்ற ஒன்று காணப்பட்டது. அவைகள் வெளிச்சக் கற்றைகளாக இடதும் வலமும் அசைந்து மக்கள் பக்கம் சென்றன. பாத்திரத்தை நோக்கி வழியும் இரத்தத்தின் அளவு கண்டு நான் வியப்படைந்தேன். அது வழிந்து திருப்பீடத்தை கறையாக்கும் என்று நினைத்தேன். ஆனால் ஒரு துளி கூட கீழே சிந்தவில்லை.

இப்போது கன்னி மரியாள் இவ்வாறு கூறினார்கள். ***"இது அற்புதங்களில் அற்புதம். ஆண்டவர் நேரத்தாலும் இடத்தாலும் அடக்கப்பட முடியாதவர் என்று நான் உனக்கு முன்பே சொல்லிருந்தேன்"*** எழுந்தேற்ற நேரத்திலே திருப்பலியில் பங்கேற்ற எல்லாரும் இயேசு சிலுவையில் அறையப்பட்டுக் கொண்டிருந்த கல்வாரி அடிவாரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

எவராவது இதனை, கற்பனை செய்ய இயலுமா? நமது கண்காளல் பார்க்க முடியாவிடினும். அவர்கள் இயேசுவை சிலுவையில் அறையும் அந்த நேரத்தில் அங்கேதான் இருக்கின்றோம். அவரை கொலை செய்பவர்களுக்காகவும், நம் ஒவ்வொருவரின் பாவங்களுக்காகவும், ***"தந்தையே இவர்களை மன்னியும்" ஏனெனில் இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கின்றனர்"*** என்று அவர்

தந்தையிடம் மன்னிப்புக் கேட்கிறார். அந்த நாள் தொடங்கி, (உலகம் என்னை பைத்தியம் என்று சொன்னாலும் பரவாயில்லை) நான் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறேன். முழந்தாள் படியிடுங்கள். ஆண்டவர் வழங்கும் இந்த அருட்கொடையை உங்களால் இயன்ற அளவு முழு அறிவோடும் முழு மனதோடும் அனுபவித்து வாழ முயலுங்கள்.

கர்த்தர் கற்பித்த செபம் சொல்லத் தொடங்கிய போது அக்கொண்டாட்டத்தில் முதல் முறையாக ஆண்டவர் பேசினார். ***"பொறு ! உன்னால் முடிந்த அளவு முழு அன்புடன் இந்த செபத்தை நீ சொல்ல வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்த நேரத்தில் உனது வாழ்நாட்களில் உனக்கு மிகப்பெரிய துரோகம் செய்தவர், செய்வித்தவர்களை உன் மனதில் கொண்டுவா. அவர்களை மார்புடன் அணைத்துக் கொள். முழு உள்ளத்துடன் இவ்வாறு சொல். இயேசுவின் திருப்பெயரால் நான் உன்னை மன்னிக்கிறேன். சமாதானம் அளிக்கிறேன். (அத போல்) இயேசுவின் திருப்பெயரால் உன்னிடம் மன்னிப்பும் சமாதானமும் நான் கேட்கிறேன். அந்த மனிதர் அந்த சமாதானத்துக்கு உரியவர் என்றால் அவர் அதை நிறைவாக ஏற்றுக் கொள்வார். அவர் உனது சமாதானத்துக்குத் தன்னை திறந்து கொடுக்கவில்லையென்றால் அதே சமாதானம் உன்னிடமே திரும்பி வரும். முதலில் உனது உள்ளத்தில் சமாதானம் இல்லாத போது மன்னிக்க உன்னால் முடியாத போது, நீ சமாதானத்தை பெறுவதையும் தருவதையும் நான் விரும்பவில்லை."***

ஆண்டவர் தொடர்ந்து பேசினார். ***"நீ செய்வதில் கவனமாயிரு. எனக்கு எதிராக குற்றம் செய்தவர்களை நான் மன்னிப்பது போல் என் குற்றங்களை மன்னித்தருளும்" என்று கர்த்தர் கற்பித்த செபத்தில் நீ மீண்டும் மீண்டும் சொல்லுகிறாய். சிலர் சொல்லுவதைப் போல் என்னால் மன்னிக்க முடிகிறது. ஆனால் மறக்க முடியவில்லை என்று சொல்வாயாகில் நீ இறைவனின் மன்னிக்கும் தன்மைக்குத் தடைகள் போடுகிறாய். நான் மன்னிக்க முடிந்த அளவு என்னை மன்னியும் அதற்கு மேல் வேண்டாம் என்று சொல்கிறாய்.***

நாம் எந்த அளவிற்கு கடவுளைக் காயப்படுத்த முடியும் என்று நான் உணர்ந்த போது நான் அடைந்த வேதனையை என்னால் விளக்க முடியவில்லை. நமது அதீத உணர்வு, வன்மம், தீய உணர்வுகள் போன்றவற்றை நாம் தேக்கி வைப்பதால் நாம் நம்மையே எந்த அளவு காயப்படுத்துகிறோம் தெரியுமா ? ஆண்டவரின் சமாதானத்தை நான் பெற்றுக் கொள்வதற்கு , நான்

மன்னித்தேன். முழு மனதுடன் மன்னித்தேன். நான் பல நேரங்களில் யாரையெல்லாம் காயப்படுத்தியிருந்தேனோ அவர்கள் அத்தனை பேரிடமும் மன்னிப்பு கேட்டுக்கொண்டேன்.

திருப்பணியாளர் கூறினர், "ஒற்றுமை, அமைதி தாரும் ஆண்டவரே! ஆண்டவரின் சமாதானம் உங்கள் அனைவரோடும் இருப்பதாக"

ஒருவர் ஒருவரை தழுவிக் கொண்டிருந்த சிலர் இடையில் (எல்லோரிடையேயும் இல்லை) ஒரு பேரொளி தங்கியதை நான் கண்டேன். அது இயேசுதான் என்று எனக்குத் தெரிந்ததால் எனக்கு அருகில் இருந்த மனிதரை ஆர்வமுடன் தழுவிக் கொண்டேன். உண்மையிலேயே அந்தப் பேரொளியில் ஆண்டவர் என்னைத் தழுவிக் கொள்வதை என்னால் உணர முடிந்தது. அவர்தான் தனது சமாதானத்தை எனக்குத் தந்து என்னைத் தழுவிக் கொண்டார். ஏனெனில் அந்த நேரத்தில் என்னால் எல்லாரையும் மன்னிக்க முடிந்தது. மற்றவர் பற்றி என் மனதில் இருந்த பழியை என்னால் நீக்க முடிந்தது. நம்மை தழுவிக்கொண்டு அமைதியளித்து அந்த மகிழ்வான தருணத்தைப் பகிர்ந்து கொள்ள தான் இயேசு விரும்புகிறார்.

திருப்பணியாளர்கள் நற்கருணை உணவு அருந்தும் தருணம் வந்தது. பேராயர் அருகிலிருந்து எல்லா குருக்களையும் என்னால் பார்க்க முடிந்தது. அவர் நற்கருணை உணவை அருந்திய போது கன்னி மரியாள் இவ்வாறு கூறினார்கள்.

***"திருப்பணியாளர்களுக்கும் அவரைச் சூழ்ந்துள்ள குருக்களுக்காகவும் மன்றாட வேண்டிய தருணம் இது. என்னுடன் சேர்ந்து சொல்லுங்கள் – இறைவா! இவர்களை ஆசிர்வதியும். புனிதப் படுத்தும், தூய்மைபடுத்தி உதவி செய்யும். இவர்களை அன்பு செய்து பாதுகாத்தருளும். உனது அன்பினால் எல்லா குருக்களையும் நினைவுகூர்ந்து அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆன்மாக்களுக்காக செபி"***

அன்பான சகோதர சகோதரிகளே! நாம் அந்த நேரத்தில் இவர்களுக்காக செபிக்க வேண்டும். ஏனெனில் பொது நிலையினரான நம்மைப் போலவே இவர்களும் திருச்சபையில் இருக்கின்றார்கள். பொது நிலையினராகிய நாம் பல நேரங்களில் குருக்களிடமிருந்து நிறைய எதிர்பார்க்கின்றோம். அவர்களும் மனிதர்கள் தான். பல நேரங்களில் குருக்களை தனிமை சூழ்ந்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு அவர்களை அன்பு செய்ய நம்மால் முடியவில்லை.

குருக்களும் நம்மைப் போன்ற மனிதர்கள்தான். அவர்களை அறிந்து கொண்டு அவர்கள் கவனிக்கப்பட வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு நம்மிடமிருந்து அன்பும் பாசமும் தேவை. இயேசுவுக்கு அர்ப்பணிக்கப் பட்டிருப்பதால் இயேசுவைப் போன்றே இவர்களும் நம் ஒவ்வொருவருக்காகவும் தங்களது வாழ்வைத் தருகின்றார்கள்.

***குருக்களிடம் தான் ஒப்படைத்த தனது மந்தையின் மக்கள் அவருக்காக செபிக்கவும் அவரது புனிதத்திற்கு உதவவும் வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். சில வேளைகளில் கடவுள் நமக்குச் செய்த அற்புதங்களையும் நமது ஆன்மாக்களை மீட்டு நமக்கு உதவி செய்ய குருக்களைக் கொடுத்ததையும் நாம் புரிந்து கொள்வோம்.***

இப்போது மக்கள் தங்கள் இடத்தில் இருந்து நற்கருணை பெறச் சென்றார்கள். இறை சந்திப்பின் உச்ச நேரம் வந்தது. ஆண்டவர் என்னிடம் கூறினார்.

***“சற்று நேரம் பொறு. நீ சிலவற்றைப் பார்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்”***

குருவின் கரத்திலிருந்து தனது நாவில் நற்கருணைப் பெறச் சென்ற ஒருவரை பார்ப்பதற்கு எனது உள்ளுணர்வு தூண்டியதால் என் கண்களை உயர்த்தினேன். இவர் எங்கள் குழுவைச் சேர்ந்தவர் என்பதையும் நேற்று ஒப்புறவு அருட்சாதனம் பெற இயலாமல் இன்று காலை திருப்பலிக்கு முன்பாக ஒப்புறவு அருட்சாதனம் பெற்றவர் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். குரு அவரது நாவில் நற்கருணையை வைத்தபோது வெண்மை பொன் நிறம் கொண்ட ஓர் ஒளிக்கீற்று அவருள் இறங்கியது. முதலில் அவளது முதுகுப்புறமும், பின் அவளது முதுகைச் சுற்றிலும் தோள்களிலும் பின் அவளது தலையிலும் இறங்கியது ஆண்டவர் சொன்னார்.

*“தூய இதயத்துடன் என்னைப் பெற வருகின்ற ஓர் ஆன்மாவை நான் இவ்வாறு தான் தழுவிக் கொண்டு மகிழ்கிறேன்”*

இயேசு பேசிய தொனி ஒரு மகிழ்வான மனிதனின் குரல் போல இருந்தது.

ஆண்டவரால் தழுவிக்கொள்ளப் பட்டு ஒளி சூழ்ந்தவளாய் தனது இருப்பிடம் திரும்பிவரும் எனது தோழியைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். பெரும் விருந்துக்குப் போகும் மனநிலையின்றி பல

நேரங்களில் சிறிய பெரிய குற்றங்களுடன் இயேசுவை வரவேற்கச் செல்வதையும் அதன் மூலம் நாம் இழந்து விடும் அற்புதமான அருளையும் நினைத்துப் பார்க்கிறேன்.

நாம் விரும்பும் பல நேரங்களில் ஒப்புரவு அருட்சாதனம் பெறுவதற்கு குருக்களே இருப்பதில்லை என்று சொல்லுகிறோம். ஆனல் நாம் எவ்வளவு எளிதாக மீண்டும் பாவத்தில் வீழ்கிறோம் என்பது தான் பிரச்சனையே தவிர, ஒவ்வொரு முறையும் ஒப்புரவு அருட்சாதனம் பெறுவது பிரச்சனை அல்ல. இதைப் போன்றே நாம் விருந்துகளுக்குச் செல்லும் போது ஆண்கள் சிகை அலங்கரிப்பவரைத் தேடுவதைப் போன்று, பெண்கள் அழகு நிலையங்களைத் தேடுவது போன்று நமது அழுக்கு கரைகளைப் போக்குவதற்கு குருவைத் தேடவேண்டும். எந்த நேரத்திலும நமது மனதில் அழுக்கான தன்மைகளை வைத்துக் கொண்டு நாம் இயேசுவைப் பெற்றுக் கொள்ளத் துணியக்கூடாது.

நான் திருவிருந்துக்குச் செல்லும் போது இயேசு என்னிடம் இவ்வாறு கூறினார். ***"கடைசி இரவு உணவின் போது நான் என்னுடையவர்கள் மேல் மிக நெருக்கமான அன்பில் இருந்தேன். அந்த அன்பின் உச்ச நேரத்தில் (மனிதப் பார்வையில் பைத்தியக்காரனின் செயலாகத் தோன்றும்) ஒரு செயலை ஆரம்பித்து வை த்தேன். அப்போது நான் என்னையே அன்பின் கைதியாக்கிக் கொண்டேன். திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினேன். எனது உயிரிலும் மேலாக நான் அன்பு செய்த நீங்கள் அநாதைகளாக இருப்பதை தாங்க முடியாததால் நான் காலங்களின் (யுகங்களின்) முடிவு வரை உங்களுடன் தங்கியிருக்க விரும்பினேன்".***

வேறுபட்ட சுவையுடன் நன் திருவிருந்தை ஏற்றுக் கொண்டேன். இரத்தமும் சாம்பிராணியும் கலந்த கலவையாக அது என்னை முற்றிலும் மூழ்கடித்தது. அளவற்ற அன்பை நான் உணர்ந்ததால் என்னால் நிறுத்த முடியாத அளவிற்கு கண்ணீர் என் கன்னங்களில் வழிந்தது.

நான் என் இடத்திற்குத் திரும்ப வந்து முழந்தாளிட்ட போது ஆண்டவர் சொன்னார். "கவனி" இப்போது தான் திருவிருந்தில் பங்கு பெற்று என்முன்னே அமர்ந்திருந்த ஒரு பெண்ணின் மன்றாட்டுகள் என் காதில் விழ ஆரம்பித்தன.

அவர் வாய் திறக்காமல் தனக்குள் சொல்லிக் கொண்டது ஏறக்குறைய இதுதான். "இறைவா ! நாங்கள் மாதத்தின் கடைசிப் பகுதியில் இருப்பதையும், வீட்டு வாடகைக்கும் கார் தவணை செலுத்தவும்

குழந்தைகளின் கல்வி செலவுக்கும் பணமில்லாத நிலையை நினைத்துப் பாரும் எனக்கு உதவ நீங்கள் ஏதாகிலும் செய்ய வேண்டும். தயவு செய்து என் கணவன் அதிகமாக மது அருந்துவதை நிறுத்த வேண்டும். அவர் அடிக்கடி போதை நிலையில் இருப்பதை என்னால் தாங்க முடியவில்லை. நீர் உதவாவிடில் என் இளைய மகன் மீண்டும் ஒராண்டு அதே வகுப்பில் படிக்க வேண்டும். இந்தவாரம் அவனுக்குத் தேர்வு இருக்கின்றது. எனது பக்கத்து வீட்டுக்காரி இடம் மாற வேண்டும் என்பதை மறந்து விடாதேயும். அவர் இப்போதே இடம் மாற வேண்டும். இனியும் அவளை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது"

அப்போது பேராயர், "ஜெபிப்போமாக" என்று சொன்னார். திருக்கூட்டம் முழுவதும் கடைசி ஜெபத்துக்காக எழுந்து நின்றது. இயேசு சோகமான குரலில் இவ்வாறு கூறினார்.

***"அவளது செபத்தை கவனித்தாயா? ஒரே ஒரு முறை கூட அவள் என்னை அன்பு செய்வதாகக் கூறவில்லை. அவளை என்னிடம் உயர்த்துவதற்காக எனது தெய்வீகத் தன்மையை, அவளது மனிதத் தன்மை அளவிற்கு நான் குறைத்துக் கொண்டு, அவளுக்குக் கொடுத்த கொடைக்காக அவள் ஒரேயொரு முறை கூட நன்றி சொல்லவில்லை"***

***"ஆண்டவரே உமக்கு நன்றி என்று ஒரு முறை கூடச் சொல்லவில்லை தேவைகளின் மன்றாட்டு மாலையாக அது இருந்தது... என்னை ஏற்றுக்கொள்ள வரும் பலரும் ஏறக்குறைய இவளைப்போலத்தான் இருக்கின்றார்கள்."***

***"நான் அன்பிற்காக மரித்தேன். உயிர்த்திருக்கிறேன். உங்கள் ஒவ்வொருவரின் அன்புக்காக நான் காத்திருக்கிறேன். அன்பிற்காகவே உங்களில் நிலைத்திருக்கிறேன். ஆனால் உங்கள் அன்பு எனக்குத் தேவை என்பதை நீங்கள் உணர்வதில்லை, ஆன்மாக்களின் மந்தமான இந்த நேரத்தில் அன்புக்காக ஏங்கும் பிச்சைக்காரன் நிலையில் இருக்கிறேன் என்பதை நினைவில் கொள்"***

அன்பாகவே இருக்கின்றவர், நமது அன்புக்காக கெஞ்சுகிறார் என்பதையும், நாம் அவருக்கு அதைத் தருவதில்லை என்பதையும் நீங்கள் அனைவரும் உணர்கின்றீர்களா? மேலும் அன்பிலும் அன்பானவரைச் சந்திப்பதற்கு நாம் தயங்குகிறோம்.

திருப்பணியாளர் ஆசிர் வழங்கப்போகையில் புனித கன்னிகை கூறினார்கள். *"விழிப்பாயிரு ! கவனமாயிரு ! சிலுவை அடையாளம் தவிர வேறு எந்த அடையாளத்தையும் பயன்படுத்தாதே. ஒரு குருவின் கரத்திலிருந்து நீ பெறப்போகும் கடைசி ஆசிர்வாதமாகவும் இது இருக்கக்கூடும். இங்கிருந்து போகும் போது நீ மரிப்பாயா இல்லையா என்பது உனக்குத் தெரியாது. வேறொரு குருவிடம் இருந்து நீ ஆசிர்வாதம் பெறும் வாய்ப்பு உனக்குக் கிடைக்குமா என்பதும் உனக்குத் தெரியாது. அர்ச்சிக்கப்பட்ட அந்த கரங்கள் வழியாக புனித, தம திருத்துவத்தின் பெயரால் உன்னை ஆசிர்வதிக்கின்றேன். எனவே, இதுதான் உனது கடைசி ஆசிர் என்பதைப்போன்று மிகுந்த மரியாதையுடன் சிலுவை அடையாளம் வரைந்து கொள்"*

*திருப்பலியைப் பற்றி புரிந்து கொள்ளாததாலும் அதில் தினமும் பங்கு பெறாததாலும் நாம் எவ்வளவு இழந்து போகின்றோம் தெரியுமா? ஆண்டவர் நம் மீது பொழிய விரும்புகின்ற அனைத்து ஆசிர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள ஏன் தினமும் அரை மணிநேரம் முன்பே எழுந்து திருப்பலிக்குச் செல்ல முயற்சி செய்யக்கூடாது ?*

*ஒவ்வொருவருக்கும் இருக்கும் கடமை காரணமாக எல்லாராலும் தினமும் திருப்பலி செல்ல இயலாது என்பதை நான் உணர்கிறேன். ஆனால் வாரம் இரண்டு அல்லது மூன்று முறையேனும் வரலாமே ? ஒன்று, இரண்டு, பத்து குழந்தை(கள்) இருக்கின்றது (ன) என்ற சிறிய காரணம் வைத்துக் கொண்டு, அதனால் என்னால் திருப்பலிக்கு வரமுடியாது எனக்காரணம் சொல்லி ஞாயிறு திருப்பலியைக் கூட தவிர்க்கின்றனர். அதே மக்கள் மற்ற கடமைகளை எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள் எல்லா குழந்தைகளையும் அழைத்துச் செல்கின்றனர் அல்லது முறை வைத்து கணவன் ஒரு நேரத்திலும் மனைவி ஒரு நேரத்திலும் செல்கின்றனர். ஆனால், கடவுளின் கடமைகளை நிறைவேற்றுவதில்லை. நமக்குப் படிப்பதற்கு, உழைப்பதற்கு, பொழுது போக்குவதற்கு, ஓய்வெடுப்பதற்கு நேரம் கிடைக்கின்றது. ஆனால் ஞாயிறு அன்று கூட திருப்பலிக்கு செல்வதற்கு நேரமே கிடைப்பதில்லை.*

திருப்பலி முடிந்த பிறகு சில மணித்துளிகள் அதிகமாக தன்னுடன் தங்கி இருக்கும்படி இயேசு என்னைக் கேட்டுக் கொண்டார். அவர் என்னிடம் இவ்வாறு கூறினார்.

*"திருப்பலி முடிந்த பிறகு அவசரமாக போய் விடாதீர்கள். சற்று நேரம் என்னுடன் இருந்து மகிழுங்கள். நானும் உங்களில் மகிழ்கின்றேன்."*

திருவிருந்து முடிந்தபின் ஆண்டவர் ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் நம்முடன் தங்கியிருப்பார் என்று நான் சிறு குழந்தையாக இருந்த போது சிலர் சொல்லியதைக் கேட்டிருக்கிறேன். அதைப்பற்றி இந்த நேரத்தில் அவரிடம் கேட்டேன்.

ஆண்டவரே உண்மையிலேயே எவ்வளவு நேரம் திருவிருந்துக்குப் பிறகு எங்களுடன் தங்கி இருக்கின்றீர்கள் ?

ஆண்டவர் எனது மடமை குறித்து சிரித்திருக்க வேண்டும்.

*"உன்னுடன் நான் எவ்வளவு நேரம் இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயோ அவ்வளவு நேரம் இருப்பேன். நீ நாள் முழுவதும் என்னுடன் பேசினாலும் உன் வேலைகள் இடையில் நீ என்னுடன் பேசினாலும் நான் உனக்குச் செவி கொடுப்பேன், நான் எப்போதும் உன்னுடன் இருக்கின்றேன். நீ தான் என்னை விட்டுவிலகிப் போகிறாய். திருப்பலிக்குப் பிறகு உனது கடமைகள் முடிந்து விடுகின்றன. ஆண்டவரது நாளை நீ அனுசரித்து விட்டாய். இப்போது உனக்கு எல்லாம் முடிந்து விட்டது. அன்றைய தினத்திலாவது நான் குடும்பத்துடன் இருக்க விரும்புகிறேன் என்பதை நீ நினைத்து பார்ப்பதில்லை."*

*உனது வீட்டில் எல்லாவற்றிற்கும் இடமிருக்கின்றது. உறங்குவதற்கும், சமைப்பதற்கும், சாப்பிடுவதற்குமாய் என எல்லா செயல்களுக்கும் இடமிருக்கின்றது. எனக்கென்று என்ன இடம் வைத்திருக்கின்றாய்? எல்லா நேரங்களிலும் தூசு சேர்த்துக் கொண்டிருக்கும் எனது உருவம் / சுரூபம் வைத்திருக்கும் இடமாக அது இருக்கக்கூடாது. ஆனால் அன்றைய நாளுக்காக வாழ்வின் எல்லா கொடைகளுக்காக நன்றி சொல்லவும். அன்றைய நாளின் எல்லா தேவைகள், ஆசிர்வாதம், உடல் நலம், பாதுகாப்பு இவற்றிற்காக மன்றாடவும் குடும்பம் முழுவதும் ஒரு நாளில் ஐந்து நிமிடமாகிலும் ஒன்றாகக் கூடி வரும் இடமாக உன் வீட்டில் இடம் எனக்கு இருக்கின்றதா?*

*"மனிதர்கள் அன்றைய தினத்திற்காகவும், வரும் வாரத்திற்காகவும் பருவத்திற்காகவும், விடுமுறைக்காகவும்*

*திட்டமிடுகின்றனர். தாங்கள் எந்த நாளில் ஓய்வெடுக்கப் போகிறோம்" என்று திரைப்படம், விருந்து இவற்றிற்குச் செல்லப் போகிறோம் என்று பாட்டியையும் பேரக்குழந்தைகளையும், குழந்தைகளையும் நண்பர்களையும் பார்க்கப்போகிறோம் என்று பொழுது போக்கப் போகிறோம் என்பதெல்லாம் தெரியும். (ஆனால் என்றைக்காவது) இன்றுதான் நற்கருணைப் பேழையில் இயேசுவை என் முழு குடும்பத்துடன் போய் பார்த்து பேசிக் கொண்டிருக்க வேண்டிய நாள் என்று தெரியுமா? எத்தனை பேர் என் முன் அமர்ந்து என்னுடன் உரையாடுகின்றார்கள்? எத்தனை பேர் சென்ற சந்திப்புக்குப் பிறகு என்ன நடந்தது என்றும், தங்கள் கவலைகள், துன்பங்கள், தேவைகள் பற்றி என்னையும் தங்களில் ஒருவராக நினைத்துப் பேசுகின்றனர் , எத்தனை முறை?*

*"எனக்கு எல்லாம் தெரியும். உங்கள் இதயத்திலும் மனதிலும் அடி ஆழத்தில் இருக்கும் இரகசியங்களை நான் ஆய்ந்து அறிகிறேன். ஆனால் உன் வாழ்வு ப ற்றி என்னிடம் பேசுவதையும், என்னையும் உன் குடும்பத்தில் ஒரு உறுப்பினராக பங்குபெற அனுமதிப்பதையும், என்னை உனது நெருக்கமான நண்பனாக ஏற்றுக் கொள்வதையும் நான் விரும்புகிறேன். ஒருவன் தனது வாழ்வில் எனக்கு இடம் தராத போது எவ்வளவு கிருபைகளை இழக்கிறான் தெரியுமா"*

நான் அன்றும் அதனைத் தொடர்ந்து எந்த நாட்களிலும் அவருடன் இணைந்திருந்தபோது அவர் எனக்குத் தொடர்ச்சியாக அறிவுரைகளைத் தந்தார். அவர் என்னுடன் ஒப்படைத்த அந்தப் பணியை நான் இன்று உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இயேசு சொன்னார்.....

*"விண்ணகத்தின் கதவுகளைத் திறப்பதன் நேரம் மிகவும் வேதனை தருவதாக இருப்பதனால் நான் என்னுடைய படைப்புகளைக் காப்பாற்ற விரும்புகிறேன் ஒரேயொரு அன்னையாகிலும் தன்னுடைய சொந்த தசையைத் தன் குழந்தைக்கு உணவாகக் கொடுத்திருக்கின்றாளா ? என்பதை நினைத்துப்பார். என் அன்பின் நிறைவை உங்கள் எல்லாருக்கும் தருவதற்கு, அன்பின் கடைசி எல்லை வரை நான் சென்றேன்"*

*"சிலுவையில் எனது தியாகத்தையும் எனது வாழ்வையும் உங்களில் தொடரச்செய்ய புனித திருப்பலியில் நான் இருக்கிறேன்.*

*எனது வாழ்வு (உயிர்) எனது இரத்தம் தவிர தந்தையிடம் வருவதற்கு உன்னிடம் என்ன இருக்கின்றது? துயரம், பாவம், தவிர ஒன்றுமில்லை"*

*"அதிதூதர்கள் வான தூதர்கள் இவர்களது புண்ணியங்களைவிட நீ அதிகம் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் உங்களைப் போன்று என்னைப் பெற்று வளமடையும் மகிழ்வு அவர்களுக்கு இல்லை. அவர்கள் (வாழ்வின்) ஊற்றிலிருந்து ஒரே ஒரு துளிதான் பருகுகின்றார்கள். ஆனால் நீங்களோ என்னைப் பெறுவதின் மூலம் பெருங்கடலின் முழுமையையும் பருகும் இரக்கத்தை பெறுகின்றீர்கள்"*

ஆண்டவர் வேதனையுடன் கூறிய மற்றொரு செய்தி வெறும் பழக்க வடிவில் அவரைப் பெற்றுக்கொள்ளும் மனிதர்கள் பற்றியும், அவரை எதிர்கொள்வதில் அடையும் பேரின்பத்தை இழந்து போன மனிதர்கள் பற்றியும் இருந்தது. வெறும் வழக்கத்தில் அவரைப் பெற்றுக் கொள்ளும் சில மனிதர்களின் உணர்வு மந்தநிலை அடைந்து விட்டதால் இயேசுவிடம் புதிதாகச் சொல்லுவதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லை. அவர் மேலும் கூறினார். "நிறைய அர்ப்பணிக்கப்பட்ட ஆன்மாக்கள் (குருக்கள்) ஆண்டவரோடு அன்பை அனுபவிக்கும் உற்சாக உணர்வை இழந்து போயிருக்கின்றனர். அவர்கள் தங்களது அழைப்பின் மேன்மையை ஒரு சாதாரண தொழில், வேலை என்று எண்ணி எவ்வளவு கேட்கப்படுகிறதோ அதற்கு மேல் கொடுக்க ஒன்றுமில்லை என்ற உணர்வில் இருக்கின்றார்கள்."

பிறகு நாம் ஒவ்வொரு முறை திருவுணவு பெறும் போதும் நமக்குக் கிடைக்க வேண்டிய பலன்கள் பற்றி ஆண்டவர் என்னிடம் பேசினார். ஆண்டவரை தினமும் (திருவுணவாகப்) பெறுகின்ற மக்கள் பலர் தங்கள் வாழ்வில் மாற்றமேயின்றி வாழ்கின்றனர். சிலர் வெகுநேரம் உழைக்கின்றனர். வெகு நேரம் ஜெபிக்கின்றனர். ஆனால் அவர்களால் ஆண்டவருக்காக கனி தர இயலாது. திருவிருந்தில் நாம் பெறும் நிறைவு நம் வாழ்வின் மாற்றத்தின் பலன்களையும், நமது சகோதர / சகோதரிகளிடம் இரக்கத்தின் பலன்களையும் கொண்டு வர வேண்டும்.

நமது தலத்திருச்சபையில் பொது நிலையினராகிய நமக்கு பெரிய பொறுப்பு உள்ளது நாம் மௌனமாக இருப்பதற்கு நமக்கு உரிமையில்லை. ஏனெனில், திருமுழுக்குப் பெற்ற எல்லாரையும் போல நம்மையும் வெளியே சென்று நற்செய்தி அறிவிக்க அனுப்பியுள்ளார். இவ்வளவு அறிவையும்

ஞானத்தையும் நாம் பெற்றுக் கொண்டு, நம் சகோதர சகோதரிகளுடன் பகிர்ந்து கொள்ளாமலிருக்கவும், நமது கையில் நிறைய உணவை வைத்துக் கொண்டு நமது சகோதர சகோதரிகளை பட்டினியில் சாக அனுமதிப்பதற்கும் நமக்கு உரிமையில்லை.

நாம் அவரது வார்த்தைகளையும், குருக்களிடமிருந்து மறையுரை களையும், திருப்பயணங்கள், ஒப்புரவு அருட்சாதனம் வழியாக கடவுளது இரக்கம், திருவுணவுமூலம் (கடவுளுடன்) அற்புத இணைப்பு, நற்செய்தி பணியாளர்களின் போதனைகள் ஆகியவற்றை ஆண்டவரிடம் பெற்றுக்கொண்டு, நாம் வசதியாக வீடுகளில், பங்குமன்றங்களில் இருந்துகொண்டு திருச்சபை நொறுங்கிப்போவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் நாம் (ஆண்டவரிடமிருந்து) நிறைய பெற்றுக்கொள்கிறோம். ஆனால் நாம் நமது வசதியான இடத்தை விட்டுவிட்டு சிறைச்சாலைகளுக்கோ, சீர்திருத்தும் பள்ளிகளுக்கோ சென்று தேவை உள்ளவர்களிடம் பேசுவதற்குத் துணிவில்லை. அவர்களிடம் சென்று, கத்தோலிக்கத்தில் பிறந்திருக்கின்றீர்கள். அதனை விட்டுவிட வேண்டாம் என்று சொல்லுங்கள். திருச்சபைக்கு அவர்கள் தேவை என்று சொல்லுங்கள். அவர்களது துன்பங்கள் மற்றவர்களுக்கு மீட்பாகும் என்பதால் துன்பங்கள் தேவை என்று சொல்லுங்கள் – தியாகங்கள் நிலை வாழ்வுபெற்றுத் தரும் என்று சொல்லுங்கள்.

மரண நோயுடன் முடிவு நிலையில் மருத்துவமனைகளில் இருக்கும் நோயாளிகளிடம் நாம் சொல்லமுடியாது. ஆனால் தீயவனின் (மரண) பயம், சோதனைகள், நன்மை தீமைகளிடையே நடைபெறும் கடைசி நேரப்போராட்டம் இவற்றிலிருந்து அவர்களை விடுவிக்க, இறைவனிடம் மன்றாடுவதிலும் தெய்வீக இரக்கத்தின் ஜெபமாலை சொல்வதாலும் உதவி செய்யலாம். ம்ரண நிலையில் இருப்பவர் எல்லாருக்கும் பயம் இருக்கும். நாம் அவர்களது கரங்களை நம் கையில் பிடித்துக் கொண்டு கடவுளின் அன்பு பற்றியும் அவர்களது மறைந்த முன்னோர்களுடனும், இயேசு, மரியா இவர்களுடன் சேர்ந்து விண்ணகத்தில் இவர்களுக்காக காத்திருக்கும் பேறுகள் பற்றியும் கூறினால் அவர்கள் ஆறுதல் பெறுவார்கள்.

நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் நேரம் நம்மைக் கவலையற்று வாழவிடாது. நாம் குருக்களின் கரங்களின் நீட்சியாக இருந்து அவர்கள் செல்ல முடியாத இடங்களுக்கும் செல்ல வேண்டும். இதற்காக நமக்குத் துணிவு வேண்டும். நாம் இயேசுவைப் பெற்றுக்கொண்டு, இயேசுவில் வாழ்ந்து, இயேசுவில் வரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இன்னும் சற்று அதிகமாக நம்மை ஈடுபடுத்திக் கொள்ள நாம் பயப்படுகிறோம். ஆண்டவர் கூறுகிறார் ***“முதலில் கடவுள் அரசைத் தேடுங்கள் மற்ற அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்”*** சகோதர சகோதரிகளே ! அவர் “எல்லாம்” என்று சொல்கிறார். அப்படியென்றால் இயலக்கூடிய எல்லா வழிகளிலும் வகைகளிலும் கடவுள் அரசைத்தேடுங்கள்.. உங்கள் கைகளை விரியத் திறந்து அதிகமாக வருகின்ற எல்லாம் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் அவர்தான் மிகவும் நல்லவற்றைத் தரும் தலைவர். உங்களது சிறிய தேவைகளைக் கூட அவரால் மட்டுமே நிறைவேற்ற இயலும்.

சகோதர சகோதரிகளே ! என்னிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தப் பணி நிறைவுபெற என்னை அனுமதித்ததற்காகவும், இந்த பக்கங்கள் உங்களை அடைந்ததற்காகவும் நன்றி கூறுகிறேன்.

அடுத்தமுறை நீங்கள் திருப்பலிக்குச் செல்லும்போது அதில் வாழ்ந்து பாருங்கள். உங்களது திருப்பலி ஒரே வகையில் இருக்காது என்ற அவரது வாக்குறுதி உங்களுள் நிறைவேறும். ஆண்டவர் உதவுவார் என்பது எனக்குத் தெரியும். அவரைப் பெறும்போது அவரை அன்பு செய்யுங்கள்.

தனது தந்தையின் வீட்டின் கதவுகளை உங்களுக்குத் திறந்து வைக்கவும். தனது அன்னையையும் திருச்சபையையும் உங்களிடம் விட்டுச்செல்வதற்கும் குத்தித் திறக்கப்பட்ட அவரது மார்பின் பக்கங்களில் சாய்ந்துகொண்டு இளைப்பாறும் இனிய உணர்வை அனுபவித்துப்பாருங்கள். இந்த சாட்சியம் வழியாக நீங்களாகவே அவரது இரக்கத்தின் அன்பை உணர்ந்து, ஒரு குழந்தைக்குரிய அன்புடன் அவருக்கு பதில் அன்பு செலுத்த இதை அனுபவித்துப் பாருங்கள்.


“கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக”

(வாழும் இயேசுவில் உங்கள் சகோதரி)

- **காட்டலினா**

(இயேசுவின் நற்கருணை இதயத்தின் பொதுநிலை ஊழியம்)





For Free Books

Contact

MATHEW STANLEY
SANTHA MARIA
Cell : 099948 74486, 099947 34610